**சார்பு நீதிமன்றம், அவிநாசி**
**O.S.No.434/2016**

**03.03.2022**

பி.வா.சா.1 கருப்புசாமி குறுக்கு விசாரணை

நான் 3 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். 1957 ஆம் ஆண்டு பிறந்தேன். தற்போது எனக்கு 65 வயதாகிறது. என்னை சிவராஜ் என்றும் அழைப்பார்கள். எனக்கு 3 மகன்கள் உள்ளனர். பாலசுப்ரமணி, செந்தில்குமார் மற்றும் பூபதி ஆகியோர். மேட்டுப்பாளையம் தேக்கம்பட்டி கிராமத்திலுள்ள சொத்து 3 ஆம் அயிட்ட சொத்து என்றால் சரிதான். வழக்கு பாகப்பிரிவினைக்காக போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தேக்கம்பட்டி கிராமத்தில் உள்ள சொத்து வெல்ஸ்புரத்தில் உள்ளது என்றால் சரிதான். அதன் காலை எண். தெரியும். 936/4, 936/3, 937/3 ஆகும். அந்த சொத்துக்களின் பேரில் மேட்டுப்பாளையம் தொடக்க வேளாண்மை வங்கியில் கடன் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். 13.12.1998 ஆம் ஆண்டு மேற்படி கடன் வாங்கப்பட்டது. சொத்து அடமானம் வைத்து கடன் வாங்கப்பட்டது என்றால் சரிதான். என்னுடைய தந்தை உயிருடன் இருக்கும்போது, காரமடை சொசைட்டியில் ஒரு அடமானப்பத்திரம் எழுதிக்கொடுத்த கடன் வாங்கியுள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள முதலைக்கருப்பன் என் தந்தை தான். சிவராஜ் என்பது நான்தான். அந்த பத்திரத்தில் பாலசுப்ரமணியன் மற்றும் செந்தில்குமார் என்று குறிப்பிட்டுள்ளது என்னுடைய மகன்களின் பெயர்கள் தான். மேற்படி சங்கதிகள் என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ளது என்றால் சரிதான். அந்த பகுதி மட்டும் வா.சா.ஆ.14 (பிரதிவாதி தரப்பு ஆட்சேபணையுடன்) குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள தேக்கம்பட்டி கிராமம், க.ச.எண். 936/4, 936/3, 937/3 மற்றும் 937/4 யாருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் முதலைக்கருப்பனுக்கு பாத்தியப்பட்ட பூமிகள் ஆகும். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் முதலைக்கருப்பன் மகன் முத்துசாமி என்ற வாசகம் உள்ளது என்றால் சாட்சி தனக்கு கண்பார்வை குறைவாக இருக்கிறது அதனால் படிக்க முடியவில்லை என்று பதிலளிக்கிறார். மேற்படி சங்கதியை வாதி தரப்பு வழக்கறிஞர் ஆவணத்தில் உள்ள வாசகத்தை படித்து காண்பிக்க அதற்கு சாட்சி தனக்கு பதில் அளிக்க இயலாது என்று கூறுகிறார். முதலைக்கருப்பன் மகன் முத்துசாமி என்பவர் யார் என்றால் எனக்கு அண்ணன் ஆவார். ஆனால் அவர் தன்னுடைய 15 வயதிலேயே வீட்டை விட்டு வெளியேறிவிட்டார். அந்த முத்துசாமிக்கு வெள்ளியங்கிரி என்ற மகன் உள்ளார் என்றால் சரிதான். வாதி தரப்பில் அளித்த சாட்சியம் பற்றிய விவரம் எனக்கு தெரியும். என்னென்ன ஆவணங்கள் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டது என்றால் 48 ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வாரிசு சான்றிதழ் வா.சா.ஆ.10 ல் உள்ள வாரிசுகள் சரிதான். மேற்படி வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வா.சா.ஆ.12 வாரிசு சான்றிதழில் உள்ள வாரிசுகள் சரியா

என்றால் சரிதான். மீண்டும் சாட்சி அதில் உள்ள 3 நபர்கள் தான் சரியான வாரிசு என்று சொல்கிறார். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.9 ஆவணம் என்னுடைய அண்ணனின் இறப்பு சான்றிதழ் என்றால் சரிதான். நான் என்னுடைய தகப்பனார் மற்றும் என் அண்ணன் முத்துசாமியும் சேர்ந்து காரமடை கூட்டுறவு வங்கியில் ரூ.5,600/- மோட்டார் ரிப்பேர் செய்வதற்காக கடன் வாங்கினோம் என்றால் சரியல்ல. குடும்பத்தில் உள்ள அனைவரும் சேர்ந்து கடன் வாங்கினோம் என்றால் என் அண்ணன் முத்துசாமி குடும்பத்திலேயே இல்லை. காரமடை கூட்டுறவு வங்கியின் நான் உறுப்பினராக உள்ளேனா என்றால் இல்லை. நான் என் குடும்பத்துடன் சேர்ந்து என் அண்ணன் முத்துசாமி உள்பட அனைவரும் அடமானக் கடன் மேற்படி வங்கியில் பெற்றுள்ளோம் என்றால் தவறு. என்னுடைய சொத்து சம்பந்தமாக வில்லங்கச்சான்றிதழ் எடுத்து பார்த்தேன். 2004 லிருந்து வில்லங்கம் பார்த்தேன்.1998 ஆம் ஆண்டு என் தந்தை பெயரில் பெறப்பட்ட அடமானக் கடன் வில்லங்கத்தில் வந்துள்ளது என்றால் நான் 1998 ஆம் ஆண்டிற்கான வில்லங்கம் பார்க்கவில்லை. நகல் தான் எடுத்தேன். நான் தெரிந்தே கூட்டுக்குடும்பமாக பெற்ற கடன் விவரங்களை மறைக்கிறேன் என்றால் சரியல்ல. என் அண்ணன் 1966 ஆம் ஆண்டு வீட்டை விட்டு வெளியேறி விட்டார். எங்கு சென்றார் என்றால் வீரபாண்டி சென்றதாக சொன்னார்கள் நான் பார்க்கவில்லை. என் அண்ணன் என்ன ஆனார் என்றால் 1992 ஆம் ஆண்டு இறந்து விட்டார். தேக்கம்பட்டி கிராமம், சாராயக்காரர் கந்தன் தோட்டத்தில் இறந்துவிட்டார். என் அண்ணன் என் தோட்டத்திலேயே சொத்திற்காக கொலை செய்யப்பட்டார் என்றால் சரியல்ல. என் அண்ணன் சாராயம் அதிகமாக குடித்து அதனால் இறந்துவிட்டார். என் அண்ணனின் பிரேத பரிசோதனை அறிக்கையை நான் பார்க்கவில்லை. என் அண்ணன் இறந்தது சம்பந்தமாக நாங்கள் புகார் கொடுக்கவில்லை. என் அண்ணன் எந்த அடிப்படையில் சாராயம் குடித்து இறந்தார் என்று சொல்கிறேன் என்றால் அவர் சாராயத்திற்கு அடிமையாகி விட்டார். அதனால் உடல் மெலிந்து இறந்து விட்டார். என் அண்ணன் இறக்கும்போது அவருக்கு 45 வயதுக்குள்ளாக இருக்கும். 1972 ஆம் ஆண்டு கிரையம் பெற்ற சமயத்திலிருந்து என் அண்ணன் அந்த சொத்தில் தான் குடும்பத்துடன் குடியிருந்து வந்தார் என்றால் சரியல்ல. அவருடன் தான் அவருடைய பிள்ளைகள் மல்லிகா, சாவித்திரி, வெள்ளியங்கிரி மற்றும் கவிதா ஆகியோர் பிறந்தார்கள் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

*Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct*

K SURESH KUMAR

Digitally signed by K SURESH KUMAR
Date: 2022.03.03 18:46:05 +0530

Subordinate Judge,
Avinashi.